052

ஸ்ரீ:

ஸ்ரீரங்கநாதன் ஸ்ரீரங்கநாச்சியார் ஸமேத

பிரணய கலகமென்னும்

மட்டடி

பள்ளியரைக் கீர்த்தனைகள்.

ஸ்ரீரங்கம்.

ரங்கநாயகி அம்மாளால்

இயற்றியது

THIRD EDITION.

(Copy Right Registered)

சென்னை

... நிகேதன அச்சுக்கூடத்தில்

... பதிப்பிக்கப்பட்டது.

1931.

Q22:417
N31.
186121

உ

ஸ்ரீரங்கநாயகி ஸமேத

ஸ்ரீரங்கநாதன் பங்குனி உத்திரத்தின்

பிரணயகலகமென்னும்

பள்ளியறைக்கீர்த்தனைகள்.

1-வது கட்டம்,

ராகம்-காலையில் கண்ணனெழுந்திருந்து மெட்டு.

ஸ்ரீரங்கமா நகர நிவாசன்
ஸ்ரீரங்க நாயகி பிராணேசுன்
ஸ்ரீரங்க ராஜனு முறையூர் சென்றதைச்
சேடியர் சொல்லவே தானறிந்தாள்
அழகிய ஸ்ரீரங்க நாயகியாம்
அன்பருக்கருள் வரதாயகியும்
அழகிய மாமணவாளரு மிங்கினில்
ஆகட்டும் வருகட்டு மென்றிருந்தாள்
பார்புகழ் பங்குனியுத்திரத்தில்
பாரிப்பல்லாக்கினி லெழுந்தருளி
ஸ்ரீரங்க மாநகர் வீதிகள் சுற்றியே
ஸ்ரீரங்க நாயகி கோயில் வந்தார்
மோஹன ரங்கர் வைபோகமுடன்
வேகமதாய் வரக் கண்டுடனே
போகவிடாமலே தோழியர்கள் பலர்
பொற்கதவைத்தாள் பூட்டிக்கொண்டார்.

2-வது கட்டம்.

ராகம்-கதவுதிறக்கிற பாட்டு மெட்டு.

ஸ்ரீரகநாயகியே தேவியே மகிழ்வுடன்
செம்பொன் கதவைத்திற பெண்ணே-யுன்மேல்
அன்புடனிங்கு வந்தேன் கண்ணே (1)

கண்ணே மணியேயென்று கதவைத் தட்டியே நின்று
காதலுடனழைப்போராரடி ஸகி
கடுகி விரட்டிவந்து சேரடி (2)

அதட்டிவந்து சேரென்று அறியாமல் பேசுகின்றாய்
அருளும் ஸ்ரீரங்க மன்னன் நானடி யுனக்
கழகியமலர் கொணர்ந்தேனடி. (3)

அழகிய மலர்கொண்டு அர்த்த நிசியில் சென்று
அந்தரங்கமுள்ளோர்க்கு நீரும் வெகு
ஆசையுடன் கொடுத்து வாரும் (4)

ஆசையுடையவள் நீ யன்புடையவளும் நீ
அந்தரங்கக்கண்மணி நீயே யிங்கு
வந்து கதவைத் திறப்பாயே (5)

கதவைத்திறக்கவிங்கு காரியமொன்றுமில்லை
காதலுடனுறையூர் நேரே சென்று
மகலவல்லிக்குக் கொடுப்பீரே (6)

கமலவல்லியென்னும் பேர் காதிலுங் கேட்டதில்லை
கண்டதில்லையுறையூர் நானே யென்றும்
சென்றதுமில்லையடி தேனே (7)

இல்லையென்றென்றனிடம் யோராத பொய்யுரைக்கும்
இந்திரஜாலம் தெரிந்தவனே ஸ்வாமி
தந்திரமுற்று மறிவேனே (8)

3—வது கட்டம்.

ராகம்-அன்னமே பொன்னம்மா மெட்டு.

அரிந்திடுவித முறைப்பாய் அந்தரங்கக் கண்மணியே
சிரந்திடு மலருதித்த சிந்துராஜன் பெண்மணியே
பழகியும் என்னை முன்பின் பாராமல் பேசுகின்றாய்
அழகிய உன்னைவிட்டு அன்யரை மதிப்பேனோடி
பத்தினி யுத்தமி மெத்வுதம்
சித்தமுகந்தென்னை யழைப்பாய் (1)

அன்யரை நினைக்காதவர்க் கதரம்வெளுத்த தென்ன
அன்றுரையூர் சென்றதென்ன அங்கவஸ்திர மஞ்சளென்ன
பந்துகழல் தன்னையெடுத்து பக்ஷமுடன் கொடுத்ததென்ன
சிந்தை மகிழ்ந்தவளுடனே சேர்ந்திருந்து மகிழ்ந்ததென்ன
செப்புவீர் செப்புவீர் ஒப்பவே
இப்பொழுதே யெந்தன் முன்பாய் (2)

எந்தனை நீர்காருமென்று யேங்கிமனந்தளர்ந்தழைத்த
அந்தரங்க பக்தனையான் அன்றிரவில் காக்கச்சென்றேன்
சங்கமதை ஊதினதால் சற்றதரம் வெளுத்ததடி
சங்கையானால் உந்தன் முன்பாய் சத்தியங்கள் செய்வேனடி
பத்தினி யுத்தமி மெத்தவும்
சித்தமுகந்தென்னை யழைப்பாய் (3)

வருஷங்கள் மூன்றாரும் சென்று வாசலினில் வந்து நின்று
வம்புகளை வளர்த்திக்கொண்டு வாதாடி நின்றுக்கீர்
தந்தை யெந்தன் நம்மாழ்வார் தயவுள்ள வார்த்தையினால்
இந்த வருஷமும் பொருத்தேன் எழுந்தருளியே மகிழ்வீர்
இன்பனே அன்பனே முன்பதாய்
என்னரங்க நாயகனே (4)

4—வது கட்டம்.

ராகம்-ஆரபி பார்த்தன் பார்த்தான் மெட்டு.

பல்லவி.

வந்தாள் தேவி
வளரும் புகழ ரங்கருள மகிழ்ந்திவெதிர்
வந்தாள் தேவி

சரணங்கள்.

செந்தாமரை மலர்ப் பாதச்சிலம்பொலிக்க
ஸ்ரீரங்கநாதனை நேரினிலழைத்திட வந்தா

பங்கய பாதத்தில் பணிந்து புகழ்ந்தரங்கர்
செங்கைத்தலப்பிடித்து பொங்கி மகிழ்ந்தழைத்து வந்

ஒப்பிமகிழ்வுடனே உபசரித்த ரங்கரை
சப்பிரகூடமமைந்த சயனகிரஹ மழைத்து வந்

தன்மீது மையல்கொண்ட தாபமற விலக
அன்புடன் விசிரியே ஆனந்தத்துடனெதிர்
நின்றாள் தேவி.

5—வது கட்டம்.

ராகம்-மாதாட பாரதேனே மெட்டு.

பல்லவி.

ஜாலஞ் செய்குவதென்னடி
ஸாரஸ நேத்ரி ஜால

அநுபல்லவி.

மாலாய் மனந்தளர்ந்தேன் மந்த ஹாஸவதனி ஜா

சரணங்கள்.

1. பாலாழியில் சிறந்த பங்கயத்தில் பிறந்த
பாலயுவதியுறுமேல் பக்ஷமுடைய எனமேல் ஜா

2. மந்தஹாஸவதனி மதுரமிருதுபாஷிணி
செந்தாமரைநயனி ஸ்ரீரங்கநாயகி ஜா

6—வது கட்டம்.

பாளைவாய் காவடிச்சிந்து மெட்டு.

அஞ்சுகம் போல் கொஞ்சுமொழி வஞ்சியே நீ கொஞ்சமெந்தன்
பஞ்சணைமேல் வந்திருப்பாய் பெண்மணி நாமும்
கொஞ்சி விளையாடிடலாம் கண்மணி (1)

ஸுந்திர ஸுகந்த அரவிந்தமலர் வந்துதித்த
ஸுந்தரியே யெந்தன் மீதில் வர்ம்மமோ நீயும்
இந்தமோடி செய்வதுரும் தர்ம்மமோ (2)

பிச்சிமுல்லை மல்லிகைவேர் பச்சை பன்னீர் ஜாதி ரோஜா
உச்சித நறுமலர்கள் சூடுவோம் நாமும்
இச்சையுடன் கூடி விளையாடுவோம் (3)

அன்னநடை மின்னலிடை கன்னல்மொழி மாதரசே
உன்னித ஜவ்வாது பன்னீர் பூசுவாய் நீயும்
என்னிடத்திலன்புடனே பேசுவாய் (4)

7—வது கட்டம்.

ராகம்-மறையோரே ஈ துரைமின் மெட்டு.

ஸ்ரீரங்க நாயகியாள்
சித்தமகிழ்வுடனுபசரித்தாள் ஸ்ரீ

சரணங்கள்.

1. பாரெங்கும் கொண்டாடும்
பரிமள ஸ்ரீரெங்க ராஜனுக்கு ஸ்ரீ

2. ஷட்ரஸமாம் பணியாரம்
ஸகல சித்ரான்னமுமன்புடனே ஸ்ரீ

3. க்ஷீரமுடன் தாம்பூலம்
சந்தன புஷ்ப ஸுகந்தமெல்லாம் ஸ்ரீ

4. அழகியமாமணவாளன்
ஆனந்தமாகவே ஆசையுடன் ஸ்ரீ

8—வது கட்டம்.

ராகம் பரசு என்னுளவேளகாதே-மெட்டு.

பல்லவி.

சிங்காஸனத்திலிருந்தார் ஸ்ரீரெங்கநாதன்
பங்குனியுத்திரத்தில் ஸ்ரீரங்கநாயகியுடனே சி

சரணங்கள்.

1. பொங்கியே மகிழ்ந்து-விண்ணோர்
புஷ்ப வருஷஞ்சொரிந்து
பூரித்துத் துதித்தவர் கொண்டாட ரம்பை
நடித்தாட யிசையுடன் பாட
பொன்னின்மணி மண்டபத்தில் உன்னித ரத்னமிழைத்த சி

2. அஷ்டதேச வாத்தியங்கள் எட்டு திக்கிலுமுழங்க
அந்தணர் மகிழ்ந்து மறைதனைப்பாட வெண்சா
மரைபோட அனைவருங்கூட
அன்புடைய தேவியுடன் நம்பெருமாளின்பமுதன் சி

9—வது கட்டம் ஊஞ்சல்.

ராகம்—பைரவி.

1. மட்டொழுகுங் கர்ப்பகக்காவனத்து நீழல்
மரகதக் கால்நிருத்தி வஜ்ரவிட்டம் போட்டு
திட்டமுடனுடகச் சங்கிலிகள் மாட்டி
செம்மணியார் பலகை தைத்த ஊஞ்சல்மீதே
வட்டமதி நிகர்வதனக் கோதையோடும்
மதிளரங்க நாயகியும் மருங்குவைகி
இட்டமுடனினிதாட ஆடிரூஞ்சல்
எழிலரங்க நம்பெருமாளாடி ரூஞ்சல்.

2, இந்திரனும் சசியுமொரு வடந்தொட்டாட்ட
இரதியு மன்மதனு மொரு வடந்தொட்டாட்ட
சந்திர சேகரனுமையோர் வடந்தொட்டாட்ட
சதுர்முகனும் வாணியுமோர் வடந்தொர்ட்டாட்ட
கந்தனும் வள்ளியும் கால்செய் வட்டந்தாங்க
கதிரவனும் மதியுமொரு கவரி வீச
அந்தர துந்துபி முழங்க அணிலமார்ப
அணியரங்க நம்பெருமாளாடி ரூஞ்சல்.

10—வது கட்டம்.

ராகம் நாதபிந்து என்னும் திருப்புகழ் மெட்டு.

1. பதின்மர் பாடியே போற்றும் வேதனே
பங்கஜாஸனன் பணியும் பாதனே
பாம்பணைத்துயில் ரங்க நாதனே லாலி லாலி

2. சூடிக்கொடுத்தவள் புகழ் பிரதாபனே
சுயம்பிரகாச மெஞ்ஞான தீபனே
சுந்திரா பரிபூர்ண ரூபனே லாலி லாலி

11—வது கட்டம்.

ராகம்-புன்னாகவராளி.

பல்லவி.

ஜோ ஜோ ஜோஜோரே ஸ்ரீரங்கா ஜோ.

சரணங்கள்.

1. தேஜோரூபா திவ்யப்பிரதாபா
திருவரங்க நிவாஸா ஆ ஆ. ஜோ.

2. கமலா நாதா கஞ்ச பொர்ப்பாதா
காவேரி தடவாஸா ஆ ஆ. ஜோ.

12—வது கட்டம், தர்லாட்டு.

ராகம் நீலாம்பரி.

இக்ஷ்வாகு குலம் விளங்க இஷ்டமுடனுதித்தவனே
இலங்கையர்கோன் மனமகிழ ரங்கநகர் மதித்தவனே
பக்ஷமுடனடியவரைப் பார்த்து மனங்களித்தவனே
பாம்பணைமேல் கண்வளரும் பணியரங்கநாதா லேலோ 1

தர்ம்மவர்ம்ம மஹாராஜன் தவத்திலினிதுகந்தவனே
தாசரதிதன்னருளால் தயவுடனே வந்தவனே
மர்ம்மமுடன் காவிரியின் மத்தியின் கண்வளர்ந்தவனே
மாதவர்கள் கொண்டாடும் மதிளரங்கநாதா லேலோ 2

13—வது கட்டம், எச்சரிகை.

1. மன்னன் விபிஷணர்க்காய் மதிள்
இலங்கை நகர் நோக்கி
பன்னகன் மேல்துயிலும் பரந்தாமா எச்சரிகா.

2. மன்னனும் புகழ் குருகூர நகர்
மாறன் சடகோபன்
தன்னால் கவிபாடும் ரங்கநாதா எச்சரிகா.

3. சூடித்தரும் கோதைகுழல்
சுகந்த மலர் தன்னை
நாடிமனமகிழும் ரங்கநாதா எச்சரிகா.

4. பாடிப்பதின்மரும் போற்றியே
மணியும் பிரகாசா
நாடில் புகழ் மிகும் ஸ்ரீரங்கராஜா எச்சரிகா.

14—வது கட்டம்.

ராகம்-பூபாளம் உதய ராக மெட்டு.

1. ரங்க நகரவாஸா ரகுகுலவரதா ஸ்ரீ
ரங்கநாயகி நேசா யெழுந்திரும்
பங்கயம் மலர்ந்தது பாஸ்கரனுதித்திட்டான்
பாம்பணை தணை விட்டு யெழுந்திரும் ரங்கநாயகா.

2. விருப்பமுடன் பதின்மர் பாமாலை பாடியே
விரும்பியே அழைக்கின்றார் யெழுந்திரும்
திருப்பாவைபாடியே தேவி கோதை யுந்தனை
தேடியே வருகின்றாள் யெழுந்திரும் ரங்கநாயகா.

3. காணவெண்ணியே உந்தன் காதல் மிகுமடியார்
கை கூப்பித்துதிக்கின்றார் யெழுந்திரும்
வீணாவேணு மிருதங்க வாத்யமுழங்குது
வைபோக ரங்கனே யெழுந்திரும் ரங்கநாயகா.

4. இந்திரனும் வெள்ளை யானையும் தேனுவும்
இமையவருடன்வந்தான் யெழுந்திரும்
அந்தர துந்துபி முழங்குது அயனரன்
அன்புடன் துதித்தனர் யெழுந்திரும் ரங்கநாயகா

5. ஆதரவுடன் திருமஞ்சன யானை மேல்
அர்தணர் கொணர்ந்திட்டார் யெழுந்திரும்
மாது திருவரங்க நாயகியுடன் கூட
மதிளரங்கேசனே யெழுந்திரும் ரங்கநாயகா.

6. காதலுடனே யும்மைக் காணவெண்ணியே மிகக்
கலங்கி தவிக்கின்றாள் யெழுந்திரும்
பேதை ரங்கநாயகி பிழைபொருத்தருள் செய்யும்
புனலரங்கேசனே யெழுந்திரும் ரங்கநாயகா.

15—வது கட்டம்.

ராகம்-முகாரி எபுடேகிருபா மெட்டு.

பல்லவி

ரங்கபுரநிலயா ரகுகுலவாதா ஸ்ரீ

அநுபல்லவி.

பங்கஜலோசன பாபவிமோசன
மங்கள குணசீலா ரங்கநாயகி லோலா ரங்

சரணம்.

இன்னமும் சொல்லவோ ஏழைநானல்லவோ
எந்தன் மேல் கிருபையுமக்கேன் வரவில்லையோ
பன்னகசயன ஓ பரமதயாகரா
பாருமெழுந்திருந்து காருமா மனோகரா ரங்

16—வது கட்டம்,

ராகம்-என்னடி நான்பெற்ற மங்கையென்னும் காவடிச்சிந்து மெட்டு.

1. வந்தனம் ஸ்ரீரங்கநாதா மலர்ப்பாதா
வேத கீதா உம்மை வந்தடைந்தேன் மதுஸூதா
உயர்—வனஜாஸனன் பணிமேவிட
மதிவேணியன் துதியே செய
மாமலர்க்கண்வளர் போதா-எந்தன்
வல்வினை தீர்க்கலா காதா (1)

2. பொன்னிசூழ் தென்னரங்கேசா ஜகதீசா
அன்பர் நேசா உயர் பிரணவவிமானத்தில் வாசா
எழில் புஜகாதிபன் மடிமீதினில்

நிஜமாகிய துயில் மேவிடும்
பூரணச்சந்திரப்பிரகாசா உம்மைப்
போற்றினேன் காரும்பிரணேசா (2)

3. மஞ்சளதுளஸிஹாரா ததிசோரா
கோபிசாரா ஹேம வரநதிபுளினேவிஹாரா
ஸ்வாமி—ஜகன்மோஹன சுகவாஹன
அகமோசன பவநாசன
ஸ்ரீரங்க நிலயப் பிரதாபா பாஹி
சித்தஜ மோஹன ரூபா (3)

ஸ்ரீவைகுண்டபுரி பூபா திவ்ய சோபா
சார்ங்கசாபா தேவா தினகர கோடிப்பிரதாபா
ஸ்வாமி வரதாயக ஸுரநாயக
சரணாகத கருணாகர
மாதவமங்கள காரா பாஹீ
வரஸோமா ஸர்வரதீரா
மாதவமங்கள காரா பாஹீ
வரஸோம ஸர்வரதீரா (4)

17-வது கட்டம் மங்களம்.

ராகம் ஹே ராம ஹே கிருஷ்ண மெட்டு.

மங்களம் ஸ்ரீரங்க மாநகர வாஸா மங்

அநுபல்லவி.

மங்களம் ஸ்ரீரங்கநாயகி மகிழ் நேசா
பொங்கியே பதின்மர் புகழ பூரணப்பிரகாசா மங்

சரணங்கள்.

1. மங்களகுணாகர மாதவமனோஹரா
மந்தஹாஸமுகார விந்தநேத்ரா
பங்கஜாஸனன் பணியும் பரமதயாஸாகரா
பாவனசரித்ர சுபசோபன கம்பீரா மங்

2. அம்புயத்தில் வந்துதித்த அழகிமணவாளனே
அன்புடன் கோதை புகழ் குணசீலனே
அம்போருஹாஸனன் பணியு மலர்தாளனே
அடியாள் ரங்கநாயகிக்கருளுமனுகூலனே மங்

ஸ்ரீ ரங்கநாதன பள்ளியெழுச்சிக்கீர்த்தனைகள்

முற்றிற்று.

... நாயக நாலை ...

விளம்பரம்.

ஸ்ரீரங்கம் ரங்கநாயகி அம்மாளால் இயற்றிய புஸ்தகங்கள்.

		ரூ. அ. பை
நூற்றியெட்டுத் திருப்பதி கீர்த்தனை 1-க்கு	...	0-12-0
துளஸி மகாத்மிய கீர்த்தனை 1-க்கு	...	0-6-0
தொண்டரடிப்பொடியாழ்வார் சரித்திரக்கீர்த்தனை 1-க்கு		0-6-0
வத்ஸலை கல்யாணக்கும்மி 1-க்கு	...	0-5-0
ருக்மணி கல்யாணக்கும்மி 1-க்கு	...	0-5-0
ஸத்ஸம்பிரதாய பஜனைப்பத்ததி 1-க்கு	...	0-6-0
சௌகாசரித்திரகும்மி என்னும் காக்ஷியோடக்கும்மி 1-க்கு		0-3-6
கோதை பரிணயக்கும்மி 1-க்கு	...	0-3-0
கோபிகா வஸ்தராபரணக்கும்மி 1-க்கு	...	0-3-0
எக்ஞய பத்தினிகள் சரித்திரக்கும்மி 1-க்கு	...	0-3-0
அநுசூயா சரித்திரக்கும்மி 1-க்கு	...	0-3-0
நம்மாழ்வார் சரித்திரக்கும்மி 1-க்கு	...	0-3-0
ஸ்ரீரங்கநாதன் பள்ளியறைக்கீர்த்தனை 1-க்கு	...	0-2-0
தேரழுந்தூர் சுவாமி கும்மி 1-க்கு	...	0-2-0
ஸ்ரீரங்கம் வழிநடைக்கும்மி 1-க்கு	...	0-1-6
சம்மந்தி யேசல் 1-க்கு	...	0-1-0
திருமங்கையாழ்வார் சரித்திரக்கும்மி 1-க்கு	...	

இவைகள் வேண்டியவர்கள் ஸ்ரீரங்கம் வடக்குச் சித்திரவீதி 1194, 1195, நெ. வீட்டிலும் பெற்றுக்கொள்ளலாம்.

வி. பி. மூலமாயும் அனுப்பப்படும்.

அறிவிப்பு

இதனால் சகலமான ஜனங்களுக்கும் தெரிவிப்பது யாதெனில், மேல்கண்ட புஸ்தகங்கள் யாவும் ஷெ ஸ்ரீரங்கம் ரங்கநாயகி அம்மாளால் இயற்றப்பட்டு காபிரைட் செய்யப்பட்டிருக்கிறபடியால் யாரேனும் ஷெயாருடைய உத்திரவின்றி அச்சிட்டால் 1867-வரு 25-வது ஆக்டின் 20-வது பிரிவு 6-வது விதிப்படி தண்டனைக்குள்ளாவார்கள் என்பதை அறியவும்.